# செப்பேடுகள் சுட்டும் சரித்திரச் செய்திகள்

# Historical Facts from Copper Plates

***முனைவர் சே. தெய்வக்கன்னி***
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
தமிழவேள் உமாமகேசுவரனார் கரந்தை
கலைக்கல்லூரி, தஞ்சாவூர், இந்தியா

**Dr. S. Deivakkanni**
*Assistant Professor, Department of Tamil*
*Thamizhavel Uma Maheswaranar*
*Karanthai Arts College, Tanjore, India*

## ஆய்வுச் சுருக்கம்

*தற்காலத்தில் தொன்மைக் காலத்தைப் பற்றி அறிய உதவும் தொல்லியல் சான்றாக கிடைக்கப் பெறுவது செப்பேடுகள் ஆகும். தொல்பொருள் ஆய்வாளர்களால் கண்டறியப்பட்ட கிடைத்தற்கரிய வரலாற்று ஆவணமாகும். அவைகள் கிடைத்த இடத்தைக் கொண்டு அவை இருக்கும் இடத்தைக் கொண்டோ பெயரிடப்படுகின்றன. எனினும் செப்பேடுகளை அவை கிடைக்கும் இடத்தை மட்டும் வைத்து அவ்விடத்திற்கே உரியது என்ற கூறமுடியாது. ஏனெனில் இச்செப்பேடுகளை எளிமையாக ஓரிடத் திலிருந்து மற்றொரு இடத்திற்கு எடுத்துச் செல்வது என்பது எளிதானதாகும், என்பதால் கிடைக்கும் இடத்தை வைதது உறுதிப்படுத்த இயலாது. மேலும் இந்தியாவில் இதுவரை 1561 செப்பேடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.*

*எனினும் ஆய்வின் எல்லை வரையறைக் கருதி தமிழகத்தில் குறிப்பாக மூவேந்தர்கள் காலத்தில் உள்ள செப்பேடுகளில் அரசாட்சி, திருக்கோயில், நிர்வாக முறைகள், தானங்கள், கொடைகள், வம்சாவழிப் பரம்பரை நிர்வாக முறைகள் போன்ற சரித்திரச் செய்திகள் ஆராயும் நோக்கில் இவ்வாய்வு அமைகிறது.*

***ஆய்வு நோக்கம்:***

*முத்திரை, பட்டயம், செப்பு, மெய்க்கீர்த்தி, சூரமாரம், பரிமாலம்.*

## Abstract

*Copper plates are the earliest archaeological evidence available to know about the ancient period. It is a rare historical document discovered by archaeologists. They are named by the place where they were found. However, copper plates cannot be attributed locally only on the basis of their findings. Since it is easy to transport these copperplates from one place to another, it is not possible to ascertain the availability of these copperplates. So far, 1561 copper plates have been discovered in India. However, in view of the scope of the study, this study is aimed at studying the historical facts of Tamil Nadu, especially the copper plates of the Moovendar period, the administrative methods of the kingdom, temples, administration, donations, endowments, hereditary administration etc.*

***Keywords:***

*Muththirai, Pattayam, Seppu, Meikkirthi, Suramaram, Parimalam.*

**Citation**

Deivakkanni, S. "Historical Facts from Copper Plates." *Journal of Tamil Culture and Literature*, vol. 3, no. 4, 2024, pp. 67–72.
**DOI**: *https://doi.org/10.5281/zenodo.20095574*

**முன்னுரை**

*செப்பேடுகள் சுட்டும் சரித்திரச் செய்திகள் என்னும் இவ்வாய்வில் பழங்கால வரலாற்றுக்கான அடிப்படை ஆதாரங்கள் செப்பேடுகள், பட்டயங்கள் உருவாக்கும் முறைகள், வல்லம் செப்பேடு, சிறிய ஆனைமங்கலம் செப்பேடு, சோழர் காலம் சிறிய லெய்டன் செப்பேடுகள், கூரம் செப்பேடு, உதயேந்திரம் செப்பேடுகள், வேலூர் பாளையம் செப்பேடுகள் அவற்றின்வழி அறியலாகும் பழந்தமிழ் வேந்தர்களின் சரித்திரச் செய்திகள் போன்றவை ஆராயப்பட உள்ளன.*

**பழங்கால வரலாற்றுக்காக அடிப்படை ஆதாரங்கள்**

*உலகம் போற்றும் தமிழர்களின் நாகரிகமும் பண்பாடும் பற்றி அறிவதற்கு நமக்கு உதவுவன புதைப் பொருட்களாகும். தமிழ்நாட்டில் எழுதப்பெறும் பொருட்களாக ஓடு, கல், ஓலை, உலோகம், மரம், சங்கு, சுடுமண், துணி, காகிதம் எனப் பலவகைப் பொருட்கள் பயன்படுத்தப் பெற்றுள்ளன.*

*இவற்றில் கல், செம்பு, ஓலை ஆகியவற்றின் பயன்பாடு மிகுதியாகும். அவ்வகையில் தமிழகச் செப்பேடுகளின் எண்ணிக்கையும் உலக அளவில் முதலிடம் பெறுகிறது. எண்ணிக்கையால் மட்டுமல்லாது அவை வெளிப்படுத்தும் வரலாறு, பண்பாடு, கலை, சமுதாயப் பொருளாதாரச் செய்திகள் அதிகம் எனலாம். தமிழகத்தில் மன்னர்களின் காலத்திய வரலாற்றைத் தொகுப்பதற்கு அவர் காலத்திய மக்கள் சமுதாயத்தின் நிலையை அறிந்து கொள்வதற்கும் கல்வெட்டுகளே இன்றி அக்காலத்தில் குறித்து வைக்க பெற்ற செப்பேடு பட்டயங்களும் பெரிதும் துணைபுரிகின்றன.*

*வேள்விக்குறிச்சி செப்பேடுகளும் சின்னமனூர் செப்பேடுகளும் கிடைக்காமல் போனால் ஏழு முதல் பத்தாம் நூற்றாண்டு வரைவிலான பண்டைய பாண்டியர் வரலாறு, களப்பிரர் பற்றிய அரிய சரித்திரங்கள் கிடைக்காமல் போயிருக்கும். மேலும் பல்லவ மன்னன் சிம்ம விஷ்ணுவின் பரம்பரையைப் பற்றியக் குறிப்புகளும் சில செப்பேடுகளின் மூலமாகவே அறிய கிடைக்கின்றன.*

**செப்பேடுகள்**

*அரசனது முத்திரையுடன் மன்னர் அளித்த மானியம், கொடை, அவர் பெற்ற சிறப்புகள் ஆகியன பொறிக்கப்பட்டு செப்பு தகடுகளில் வெளியிடப்பட்டவை செப்பேடுகள் எனப்படும்.*

*வேள்விக்குடி செப்பேடுகள், அன்பில் செப்பேடுகள், கரந்தைச் செப்பேடுகள் ஆகியன கல்வெட்டுகளைப் போலவே மன்னர் சரித்திரங்களைப் புலப்படுத்தும் மெய்க்கீர்த்தியைத் தன்னகத்தைக் கொண்டிருக்கின்றன. கல்வெட்டுகளும், செப்பேடுகளும் பெரிதும் கொடைகளைப் பற்றியே கூறுகின்றன.*

*வீரராசேந்திரனின் ஏழாம் ஆட்சியாண்டில் வெளியான சாரலா செப்பேடு கன்னியாகுமரி கல்வெட்டின் நகல்படி ஆகும். முதலாம் இராசராசனுடைய 21 ஆம் ஆட்சியாண்டில் வெளியிடப்பட்ட செப்பேடு டச்சுக்காரர்களால் எடுத்து செல்லப்பட்டு இப்போது லெய்டன் அருங்காட்சியத்தில் உள்ளது. இது செப்பேடு என்றும் தாமிரப் பட்டயம் என்றும் கூறப்படும் அரிதாக வெள்ளியிலும், தங்கத்திலும்கூட பட்டயங்கள் வெளிவந்துள்ளன.*

**பட்டயங்கள் உருவாக்கும் முறைகள்**

*செப்பு கட்டிகளை உருக்கி அடித்து பட்டைகளாக செய்வார்கள். அதன் இலக்குவான படைப்பின் மேல் விவரங்களை ஒரு பண்டிதர் எழுத்தால் எழுதுவார். அதன் பிறகு பட்டயங்கள் நன்கு சாய்ந்த பிறகு எழுத்தின் மேல் உளி கொண்டு செதுக்கி செப்பேடுகள் முழுமை அடையும். ஒவ்வொரு பட்டயத்திலும் எண்கள் இடப்படும். பட்டையங்களின் ஓரத்திலோ, நடுவிலோ கிளைகள் இடப்படும். இவ்வாறு எழுதப்பட்ட செப்பு பட்டயங்கள் ஒரு வளையத்தில் கோர்க்கப்படும் வளையத்தின் முகப்பில் அரசனது முத்திரையும் செம்பில் செதுக்கி இணைப்பார்கள். சேரர், சோழர், பாண்டியர், பல்லவர் மற்றும் பல சிற்றரசர்கள் ஏராளமான செப்பேடுகளை வெளியிட்டுள்ளனர்.*

*இந்தச் செப்பேடுகளில் தானம் குறித்த செய்தி பிரதானமாக அமைந்தாலும் மேலும் பல தகவல்களும் பதிவு செய்யபப்டுகிறது. அரசரின் விவரம், அவனின் முன்னோர், அவனது வாரிசு விவரம், வெற்றி இன்னும் பல தகவல்கள் அச்செப்பேடுகளில் காணப்படுகின்றன. இவை அனைத்தும் நமக்கு வரலாற்று தரவுகளாக உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.*

**வல்லம் செப்பேடு**

*தஞ்சை அருகே சரளைக் கற்கள் நிரம்பி செம்மண்ணால் ஆன மலைப்பாங்கான நிலங்களை உடைய ஊர் வல்லம். இயற்கை அரண் மிகுந்த ஊர் வல்லமாகும் என்றார் டாக்டர் ரா.பி.சேதுபிள்ளை அவர்கள். தஞ்சையை நாயக்கர் கண்டபோது கி.பி.1674இல் நடைபெற்ற ஒரு சம்பவம் சமய பொதுமையையும், மனித நேயத்தையும் காட்டுவதாக உள்ளது.*

*ஒரு பார்ப்பன பெண் வல்லத்திலிருந்து தஞ்சைக்குப் புறப்பட்டு சென்றாள். வழியில் காடு குறுக்கிட்டது. அதே நேரம் வல்லத்தை நோக்கி தஞ்சையிலிருந்து புறப்பட்ட பக்கிரி சாயபு காட்டை அடைகிறார். அப்போது அப்பார்ப்பனப் பெண்ணைக் கெடுக்கவும், நகைகளைப் பறிக்கவும் கள்ளர்கள் முற்பட அவள் பக்கிரி சாயபு காலில் விழுந்து தன்னைக் காப்பாற்றுமாறு வேண்டுகிறாள்.*

*சாயபு கள்ளர்களிடம் அப்பெண்ணை விடுமாறு கூறுகிறார். கள்ளர்கள் சாயபைக் கொன்று விடுகின்றனர். தனக்காக உயிர்விட்ட சாயபுக்காகப் பார்ப்பனப் பெண் தன் நாக்கைப் பிடுங்கி செத்து விடுகிறார். கள்ளர்களுக்கும் கண் தெரியாமல் போய்விடுகிறது. பிறகு தன் தவறை உணர்ந்து கடவுளிடம் வேண்டி கண் பார்வை பெறுகின்றனர். பின்பு அவ்விடத்தில் கோயில்கட்டி வழிபட்டனர் அக்கள்ளர்கள்.*

*மனித நேயத்தின் முன் சமயம் சாதி போன்றவை எடுபடாது என்பது இப்பட்டயத்தின் செய்தி மூலம் அறியமுடிகிறது. மதவெறியும், சாதிக் கொடுமைகளும், சண்டைகளும் மிகுந்து காணப்படும் இக்காலத்திற்கு ஒரு படிப்பினையாக இச்செப்பேடு விளங்குகிறது எனலாம்.*

*இக்கோயிலுக்கு ரகுநாத நாயக்கன் 1500 குழி நன்செய் நிலம் மானியம் வழங்கினார். அவர் இறந்த பின்பு இத்தானம் செப்பேடு ஆக எழுதப்படுகிறது. காலம் கி.பி.1614 எனலாம். (முனைவர் கு.விஜயகுமார், தொல்லியல், ப.182)*

*மேலும் வல்லம் செப்பேட்டில் 43 வரிகளில் சரித்திரச் செய்திகள் விளக்கப்படுகின்றன.*

**சிறிய ஆனைமங்கலம் செப்பேடு (சோழர் காலம்)**

*ஆனைமங்கலம் செப்பேடுகள் அல்லது பெரிய லேடன் செப்பேடு என அழைக்கப்படும் சோழர்காலச் செப்பேடுகள் சோழ அரசர்களின் பரம்பரை அம்மன்னர்களின் பெயர்கள் மற்றும் அவர்களின் ஆட்சி காலத்தில் நிகழ்த்தப்பட்ட சாதனைகள் ஆகியவற்றை எடுத்து இயம்பும் முக்கிய வரலாற்று ஆவணங்களாக திகழ்ந்தவையாகும்.*

*நெதர்லாந்து லேயிடம் பல்கலைக்கழக நூலகத்தின் அரிய ஆவணங்கள் பகுதியில் இவை பாதுகாக்கப்படுகின்றன.*

*இச்செப்பேடுகள் கூறும் வரலாற்றுச் செய்திகள் பதினோராம் நூற்றாண்டில் சோழப் பேரரசுக்கும் ஸ்ரீ விஜய பேரரசுக்கும் இடையேயான உறவை விளக்கும் ஆவணங்கள் ஆகும். (முனைவர் கு.விஜயகுமார், தொல்லியல், ப.185)*

**சிறிய லெய்டன் செப்பேடுகள்**

*இச்செப்பேடு சமஸ்கிருதத்தில் அல்லாமல் முழுமையும் தமிழ்மொழியில் எழுதப்பட்டுள்ளது. கிரந்த எழுத்துக்களும் கலந்த வகையில் செப்பேட்டில் உள்ள சொற்கள் அமைந்துள்ளன. பெரிய லீடர் செப்பேடுகளில் உள்ளதுபோல் இச்செப்பேடு வரிகளுக்கான எண் வழங்கப்படவில்லை.*

*இது ராஜகேசரி வர்மன் முதலாம் குலோத்துங்க சோழனின் மெய்க்கீர்த்தியின் தொடக்க வரிகளான புகழ் மாது விளங்க என்ற வாக்கியத்தோடு செப்பேடு தொடங்குகின்றது.*

*சேரர், சோழர், பாண்டியர், பல்லவர் மற்றும் பல சிற்றரசர்கள் ஏராளமான செப்பேடுகளை வெளியிட்டுள்ளனர். இதுவரை சோழர் காலத்திய செப்பேடுகளாக கிடைத்து இருப்பவை.*

1. *உதயேந்திரம் செப்பேடு (முதலாம் பராந்தகச் சோழனார் வெளியிடப்பட்டது கி.பி.923).*
2. *வேலஞ்சேரி செப்பேடு (கி.பி.932 முதல் பராந்தகச் சோழனால் வெளியிடப்பட்டது).*
3. *அன்பில் செப்பேடு (சுந்தர சோழனால் வெளியிடப்பட்டது கி.பி.961).*
4. *திருச்செங்கோடு செப்பேடு - 2 (ராஜகேச வரி வெளியிட்டது கி.பி.961).*
5. *திருச்செங்கோடு செப்பேடு - 2.*
6. *சென்னை அருங்காட்சியக செப்பேடு (உத்தம சோழனால் வெளியிடப்பட்டது கி.பி.1018).*
7. *பெரிய லெய்டன் செப்பேடு (ராஜேந்திர சோழனால் வெளியிடப்பட்டது கி.பி.1018).*

*பல்லவ வரலாற்றை எழுத செப்பேடுகளும் பயன்படுகின்றன. அவற்றுள் மை த ஓ செப்பேடு, பூரம் செப்பேடு, காசுகுடி செப்பேடுகள், வேலூர் பாளையம் செப்பேடு, நிருபதங்கன் வெளியிட்ட தாகூர் செப்பேடுகள் போன்றவை பல்லவர் கால சரித்திரத்தை அறிய உதவும் ஆவணங்களாக திகழ்கின்றன.*

*ஐரோப்பிய கண்டத்தில் ஹாலந்து என்ற நாட்டில் லெய்டன் என்ற நகர் உள்ளது. இங்குள்ள அருட்காட்சியகத்தில் சோழர் காலத்தைச் சேர்ந்த இரண்டு செப்பேடுகள் உள்ளன. அவை 21 ஏடுகளைக் கொண்டவை.*

*அவ்விரண்டில் முதலாம் இராஜராஜனால் வெளியிடப்பட்ட பல ஏடுகளை உடைய செப்பேடு பெரிய லெய்டன் செப்பேடு என அழைக்கப்படுகிறது.*

*பராந்தக சோழன் தில்லையில் சிவன் கோயிலுக்குப் பொன் வேய்ந்த செயலை இச்செப்பேடு குறிக்கிறது. மேலும் நாகைப் புத்தப் பள்ளிக்குத் தானம் வழங்கியதை இதில் காண்கிறோம்.*

**கூரம் செப்பேடு**

*இரணியன் என்ற அரக்கனை அழிப்பதற்கு விஷ்ணு நரசிம்ம அவதாரம் எடுத்தார். இந்த அவதாரத்தில் முகம் சிங்கமாகவும், உடல் மனித உடலாகவும் அமைந்து இருந்தது. நரசிம்மன் இரணியனைக் கொன்றது போல பல்லவாசன் முதலாம் நரசிம்மன் வர்மன் இரண்டாம் புலிகேசி பரிபாலம், மணிமங்கலம், சூரமாரம் ஆகி'ய மூன்று இடங்களில் தோற்கடித்து கொன்றான் (முனைவர் அறிவுராஜ். முனைவர் க.குமார், தமிழக வரலாறும் தமிழர் பண்பாடும், ப.114).*

*இந்தப் போரை ஒரு காலகட்டத்தில் தோற்றுப்போன இரண்டாம் புலிகேசியைப் பிடித்து அவருடைய முதுகின் மீது தனது வெற்றியை எழுதிவிட்டார் முதலாம் நரசிம்மன் என்று சரித்திரம் எடுத்துக்காட்டுகிறது.*

**உதயேந்திரம் செப்பேடு**

*முதலர் பராந்தகனாகிய மதிரை கொண்ட கோப்பரகேசரியின் 15 ஆம் ஆட்சியாண்டில் வீரு நாராயணச்சேரி என்ற பிரமதேயம் உருவாக்கப்பட்டு, தானம் தந்த விவரம் உதயேந்திரன் செப்பேட்டில் உள்ளது.*

*சோழர்களின் செப்பேடுகளில் இதுவே காலத்தில் முந்தையது எனலாம். இச்செப்பேட்டில் மதிரை கொண்ட கோப்பரகேசரி எனறு வருகிறது. கல்வெட்டுகளிலும் இச்சொற்றொடர் ஆராயப்பட்டுள்ளது.*

*அகத்தியம் என்ற முனிவர் வாதாப் என்ற அரக்கனைக் கொன்றான். அதுபோல நரசிம்ம வர்மன் தனது எதிரி இரண்டாம் புலிகேசியைப் பரிபாலம், மணிமங்கலம், சூரமாரம் ஆகிய இடங்களில் தோற்கடித்தான். முதலாம் நரசிம்மன் அதன் பின் இரண்டாம் புலிகேசியின் தலைநகரமாகிய வாதாபியைத் தாக்கி முதலா' நரசிம்மனை அகத்திய முனிவரோடு ஒப்பிட்டு இருக்கிறார்கள் என்ற செய்தி உதயேந்திரம் செப்பேடு மூலம் அறியமுடிகிறது.*

**வேலூர் பாளையம் செப்பேடுகள்**

*முதலாம் நரசிம்ம வர்மன் சாகளுக்கியர்களைத் தோற்கடித்து அவர்களின் தலைநகரமாகிய வாதாபியை மத்திய பகுதியில் ஒரு வெற்றி தூணை நட்டார். இந்தப் போரில் சம்பந்தப்பட்ட மூன்று இடங்களையும் அடையாளம் கண்டுபிடித்து வரலாற்று உலகிற்கு கூறிய பெருமை எஸ்.எஸ்.கோவிந்தசாமியைச் சாரும். இந்த இடங்களைத் தான் எழுதிய பல்லவ வரலாற்றில் குறுநில மன்னர்களின் பங்கு என்ற தனது ஆங்கில நூலில் அடையாம் காட்டி இருக்கிறார் (முனைவர் ந.அறிவுராஜ், முனைர்வ ஆர்.குமார், தமிழக வரலாறும் தமிழர் பண்பாடும், ப.115).*

*மணிமங்கலம் என்ற ஊர் அதே பெயரில் காஞ்சிபுரத்திற்கும் கிழக்கு 20 மைல் தொலைவில் உளள்து. சூரமாரம் என்ற ஊர் தற்போது சூரமாரம் என்று அழைக்கபப்டுகிறது. இந்த சூரமாரம் ஆந்திர பிரதேசத்தில் சித்தூர் மாவட்டத்தில் இருக்கிறது. இதுவும் இன்ன பிற சரித்திர செய்திகளும் செப்பேடுகள் வழி காணக் கிடைக்கின்றன.*

**தொகுப்புரை**

*தமிழக வரலாற்றை மொழி, இனம், நாடு என்ற மூன்று நிலைகளிலும் காணலாம். தமிழ்மொழியும் இனமும் நாடும் உலகில் தொன்மையானவை. எனவே தொன்மையும் பழமையும் முதன்மையும் உடையது தமிழ்நாட்டு சரித்திரங்கள் ஆகும். மூவேந்தர்கள் சரித்திரங்கள், அரசியல் சமூக நிலைகள் சிறப்பம்சங்கள், கொடை, மானியம், போர் முறைகள் பிறவும் செப்பேடுகள் வழி காணக் கிடக்கின்றன.*

*பட்டயங்கள் உருவாக்கும் முறைகள் பாதுகாக்கப்படுகின்ற விதங்கள் தமிழ்நாட்டிலும் உலக அளவில் காணக்கிடக்கும் செப்பேடுகளின் வழி அறியலாகும் தனித்துவங்கள் மிகச் சரித்திர செய்திகளும் இன்ன பிற கூறுகளும் இவ்வாய்வின்வழிக் கண்டறியப்பட்டன.*

**துணைநூற் பட்டியல்**


1. அறிவுராஜ், ந., குமார், ஆ., தமிழக வரலாறும், தமிழர் பண்பாடும், பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை.
2. பிள்ளை, கே.கே., தமிழக வரலாறு மக்களும் பண்பாடும், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை.
3. மகாதேவன், வே., சோழர் செப்பேடுகள், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 2013.
4. ராசேந்திரன், மு.இ.ஆ.ப., சோழர் காலச் செப்பேடுகள், அகநி பதிப்பகம், சென்னை, 2015.
5. விஜயகுமார், கு., தொல்லியல், தமிழ்ச்சாரல், சென்னை.


**இணையதளம்**


1. www.tamilvu.org
2. www.projectmadurai.org
3. https://tamilarchaeology.blogspot.com


## References


1. Arivuraj, N., Kumar, A., Tamilaga Varalarum Tamilar Panpadum, Paavai Publications, Chennai.
2. Pillai, K.K., History of Tamilaga Varalaru Makkalum Panpadum, International Institute of Tamil Research, Chennai.
3. Mahadevan, V., Chozhar Sepedugal, Tamil University, Thanjavur, 2013.
4. Rasendran, M.I.A.S., Cholar Kala Sepedugal, Akani Publications, Chennai, 2015.
5. Vijayakumar, K., Thozhiyal, Tamilcharal, Chennai.